

**விவேகானந்த கேந்திரம்- நார்டெப், வர்ம ஆராய்ச்சி மற்றும் வள மையம் கன்யாகுமரி**

# சித்த பாரம்பரிய சிறப்பு வர்மப் பயிற்சிப் பட்டறை

வி.கே - நார்டெப்பினுடைய சித்த வர்ம ஆய்வு & வள மையம் சார்பாக உங்கள் அனைவருக்கும் வணக்கங்கள். சித்த வர்மப் பயிற்சிப் பட்டறையானது கற்க வரும் மாணவர்களுக்கு எளிதில் புரிந்துணர்ந்து தத்தம் நடைமுறையில் பயன்படுத்தும் பொருட்டு, வர்ம மருத்துவம் மீதான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு சிலவித மாறுதல்களுடன் முழுமையாக பழமை மாற்றமின்றி - பழமை யுத்திகள் மாறுதலின்று புதுவித உத்வேகத்துடனும் எளிய முறையிலும் சிறப்பாக கற்றுக்கொள்ளும் வகையில் 4 அடுக்காக ஒரு வருடம் முழுவதும் அடுத்தடுத்து நடைபெற உள்ளது.

1. வர்ம மருத்துவத்தின் வரலாறு, வர்ம கலையின் சிறப்பு தன்மைகள்
2. வர்ம பாரம்பரியத்தின் அடிப்படை
3. வர்மப் புள்ளிகள்
4. வர்மப் அடங்கல் புள்ளிகள்
5. வர்மப் தடவல் புள்ளிகள்
6. வர்ம குறிகுணங்கள்
7. நோய்க்கணிப்பு
8. வர்மச் சிகிச்சை முறைகள் - கிராமப்புற உத்திகள்
9. வர்ம செயல்முறை - நடைமுறை நுட்பப் பயிற்சி
10. வர்மச் சரயோகம்
11. எலும்பு ஒடிவு - முறிவு நுட்பங்கள்
12. வர்ம களரி அடிப்படை முறை - செயல்முறை
13. வர்மம் தொடர்பு - ஆய்வுகள்

உள்ளிட்ட பல வர்மமுறைகளை பாரம்பரியத்துடனும், ஆய்வுகளுடனும் சித்த மாணவர்களுக்காக, சித்த மருத்துவர்களுக்காக, வைத்தியர்களுக்காக, ஆர்வலர்களுக்காக நடைபெற உள்ளது.

சான்றிதழ் 3 வித நிலைகள்

1. வர்ம இளநிலை அறிஞர் - 1 வருடம் வர்ம முதல்நிலை
2. வர்ம அறிஞர் - 1 வருடம்
3. வர்ம ஆசான் - 1 வருடம்

1 வருடம் - தொடர் பயிற்சி - வகுப்பறை + செய்முறை

1 வருடம் - நடைமுறை & ஆய்வுப் பயிற்சி

சித்த பாரம்பரிய வர்ம முறைகள் நுட்பங்கள் மீண்டும் மக்களிடையே விழிப்புணர்வு பெறப்பட வேண்டும் என்ற நோக்கில் நடைபெறுகிறப் இப்பயிற்சியில் ஆண், பெண் யாவரும் வர்ம ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம்.

**முக்கியக் குறிப்புகள்:**

1. மேற்கூறிய 3 நிலைகளுக்கு தங்களைத் தயார்படுத்த வேண்டுகிறோம்.
2. ஏற்கனவே விவேகானந்த கேந்திராவில் பயின்றவர்கள் முதலில் உள்ள வர்ம இளநிலை அறிஞர் நிலையில் ஒரு வருடம் விடுத்து தங்களை ஆயத்தப்படுத்த அடுத்த ஒரு வருடம் எங்களுடன் சேர்ந்து செயல்பட விண்ணப்பிக்கலாம்.
3. தொடர்ந்து தங்களுக்கு அறிவுறுத்தப்படும் செயல்பாடுகளுக்கு ஏற்பவும், முழுமையாக பயின்று, பயிற்சி முடித்தப் பின்பே சான்றிதழ் வழங்கப்படும்.
4. பாரம்பரிய சித்த வர்மக் கலையை பரப்பவே, உரிய உயர்நிலை பெறவே என்பதை மனதில் கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி **04652 - 246296, 298294. பேசும் நேரம் 11.00 மணி முதல் 4.00 மணி வரை**
5. தொடர்பு உறுபினர்கள் மேற்கூறிய நிலையை பெற எங்களை தொடர்பு கொள்ளலாம். அலுவலக நாட்களில் - நேரங்களில் நேரிடையாக விளக்கம் பெறலாம்.
6. வர்ம ஆசான் நிலைக்கு உயர்த்த இடைவிடாத பயிற்சி மற்றும் அறிவுறுத்தப்படும் பணிகளில் தொடர்ந்து ஈடுபாட்டோடு பங்கு பெற வேண்டும்.
7. தொடர்ந்து பயணிக்க வேண்டும். முடிவெடுக்கும் பணிகளை முழுமையாக செயல்பட்டு நிறைவேற்றி செய்து முடிக்க வேண்டும். - இதுவே அடிப்படை
8. **விவேகானந்த கேந்திராவில் நடைபெறும் வர்ம கலைப் பயிற்சி விவேகானந்த கேந்திராவில் மட்டுமே கற்றுத்தரப்படுகிறது. வேறு இடங்களில் இல்லை.**
9. பயிற்சிப் பட்டறை குருகுல கல்விமுறையைச் சார்ந்தது. உரிய முறைப்படி, உரிய நிலைப்படி தங்களை ஈடுபடுத்த வேண்டும்.
10. யோகக் கலையைப் போலவே வர்மக்கலையும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் சென்று அடைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

**நாள்** : இரண்டு நாட்கள் விதம் பயிற்சி அரங்குகள் - முதல் பயிற்சி அரங்கு ஜுன் 23, 24 ( வெள்ளி, சனி கிழமைகளில்) நடைபெறும். (முழு விவரம் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது)

**இடம் :** தொழில்நுட்பமையம், ஆஞ்சநேயபுரம், கல்லுவிளை, கன்னியாகுமரி
(Check google map - VkNardep training centre, Anjanepuram)

**பயிற்சிக் கட்டணம்** :

❖ முதல் கருத்தரங்கு கட்டணம் (இரண்டு நாட்கள்) ரூ.4200/- (நான்காயிரத்து இருநூறு மட்டும்)

❖ **விவரம்**:

- ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) இரண்டு நாட்களுக்கு உணவு, தங்கும் வசதி உட்பட)
- முதல் தடவை மட்டும் இதர கட்டணம் ரூ.1200/- (புத்தகம்)
- பயிற்சி பொருட்கள் ரூ.500/- (வர்மக்குச்சிகள், வர்ம மருந்துகள், எலும்பு முறிவு உபகரணங்கள் உட்பட)
- விவேகானந்த கேந்திரம் - சித்த பாரம்பரிய வர்ம ஆய்வு மற்றும் மேம்பாடு, இதில் உறுப்பினராவதற்கு கட்டணம் ரூ.500/-

❖ இரண்டாவது கருத்தரங்கு முதல் ரூ.2000/- மட்டும்
(இரண்டு நாட்களுக்கு உணவு, தங்கும் வசதி உட்பட)

**பயிற்று மொழி:** தமிழ்

**வந்துசேரும் நேரம்:** வெள்ளி அன்று காலை 8.00 மணிக்குள் கருத்தரங்கு கூடத்திற்குள் வரவும்

**கருத்தரங்கு விபரம்:**

- பாரம்பரிய வர்மம், எலும்பு முறிவு சிகிச்சை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நாங்கள் நடத்தும் சித்த பாரம்பரிய எலும்பு முறிவு பற்றிய தொடர் பயிலரங்கமாகும். வர்ம எலும்பு ஒடிவு முறிவு சிகிச்சை பற்றிய மருத்துவ பரிகாரங்கள் மற்றும் பயிற்சி வழங்கப்படும்.
- பாரம்பரிய வைத்தியர்கள், ஆர்வலர்கள், சித்த, ஆயுர்வேத மற்றும் இந்திய மருத்துவத்துறை மாணவர்கள், மருத்துவர்கள் பங்கேற்கலாம்.
- அனைத்து பயிற்சியரங்குகளிலும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். இடையே புதிய பதிவாளர்கள் சேர்க்கை கிடையாது.
- கருத்தரங்கிற்கு வரும்போது 'வர்மம்' பற்றிய பொதுகட்டுரை (தங்களால் தெரிந்தவரையில்) எழுதிக் கொண்டு வர வேண்டப்படுகிறீர்கள்.
- தேர்வு செய்யப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவீர்கள்.
- தங்குவதற்கு எளிய வசதி செய்து தரப்படும். ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக தங்குவதற்கு வசதிசெய்து கொடுக்கப்படும். இருநாட்களும் கேந்திராவில் தங்கி இருக்க வேண்டும். (காலை முதல் இரவு வரை தொடர்ந்து வகுப்புகள் இருக்கும் என்பதால்)
- விவேகானந்த கேந்திராவின் நடைமுறை வழக்கு ரீதிக்கு ஒத்துழைத்து நம் பாரம்பரியமான நமது மருத்துவத்தை சிறந்த முறையில் தாங்களும் கலந்து கொண்டு, நமது ஏனைய பிற மருத்துவ பெருமக்களுக்கு தகவல் தெரிவித்தும் பயனுற செய்ய வேண்டுகிறோம்.
- ஆதார் அடையாள அட்டை நகல் கண்டிப்பாக கொண்டுவரவும்.
- தங்களின் புகைப்படம் இரண்டு எடுத்துவரவும்.
- சுயதேவைப்பொருட்கள் உடன் தேவையானவற்றை கொண்டுவரவும்.

நம் பாரம்பரிய மருத்துவம் வளரவேண்டும். மக்களிடையே, மருத்துவர்களிடையே சேரவேண்டும் என்ற நோக்கில் நடைபெறுவதால் ஒத்துழைப்பு தரும்படி மிக அன்போடு கேட்டுக்கொள்கிறோம்..

வாழ்க தமிழ்!
வளர்க பாரதம்!!

இறைஆசியில்,

(இயக்குநர்)
**Varmam Research and Resources Centre**

# *Fitst year Varma course yearly time shedule*

| Class details | Month | Date | Year | Day - I | Day - 2 |
|---|---|---|---|---|---|
| First Class | June | 23rd & 24th | 2023 | Friday | Saturday |
| Second Class | August | 4th & 5th | 2023 | Friday | Saturday |
| Third Class | September | 7th & 8th | 2023 | Thursday | Friday |
| Fourth Class | October | 12th & 13th | 2023 | Thursday | Friday |
| Fifth Class | November | 16th & 17th | 2023 | Thursday | Friday |
| Sixth class | December | 21st & 22nd | 2023 | Thursday | Friday |